**சார்பு நீதிமன்றம், வந்தவாசி திருவண்ணாமலை மாவட்டம்.**

முன்னிலை- திருமதி.ச.சரண்யா., எம்.எல்.,

சார்பு நீதிபதி, வந்தவாசி

2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ம் நாள் வியாழக்கிழமை

**வழக்கிடை மனு எண்.01/2024 in அசல் வழக்கு எண்.340/2023**

1. கஸ்தூரி....
2. சாந்தி
3. சுரேஷ்குமார் ......மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. பெ. தமிழ்செல்வன்
2. பெ. அஞ்சலிதேவி
3. பெ. பாலகிருஷ்ணன்
4. பெ. ராதாகிருஷ்ணன்
5. பெ. எழிலரசன்
6. அ. சரளாம்மாள்
7. அ. ஆனந்தன்
8. அ. பிரித்தி ..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 18.11.2025 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. உதயசங்கர் அவர்கள் ஆஜராகியும், 1, 2, 4, 5, 6, 7, 8,எதிர்மனுதாரர்கள்/1, 2, 4, 5, 6, 7, 8, பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.P.கீர்த்தி அவர்கள் ஆஜராகியும், 3 ம் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. L.கந்தசாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு

வாதங்களை கேட்டும், மனு மற்றும் எதிர்உரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## உத்தரவு

இம்மனு கட்டளை XXXIX, விதி. 1 மற்றும் 2 உ.வி.மு.ச.வின் கீழ் மனு சொத்துக்களில் உள்ள பாகம் குறித்து தீர்மானிக்கும் வரை மனு சொத்துக்கள் குறித்து எவ்வித ஆவணங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும், மனு சொத்துக்கள் எந்த நிலையில் உள்ளதோ அதே நிலையில் நீடிக்க வேண்டும் என்று இடைக்கால தடையுத்தரவு கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்.-**

2.1) இம்மனுவில் மனுதாரர் என்றும், அசல் வழக்கில் 2ம் வாதி என்றும், தனக்காகவும், மற்ற மனுதாரர்களுக்காகவும் சேர்த்து இந்த மனுவை தாக்கல் செய்வதாகவும், தனது தகப்பனாரும், 1ம் வாதியின் கணவரும் 3ம் வாதியின் தகப்பனாருமான காலஞ்சென்ற உதயசங்கர் என்பவரும் 1 முதல் 5 பிரதிவாதிகளும் உடன் பிறந்த சகோதர, சகோதரிகள் என்றும், 6, 7, 8 பிரதிவாதிகள் 1ம் வாதியின் கணவரும் , 2, 3 வாதிகளின் தகப்பனாருமான காலஞ்சென்ற உதயசங்கர் என்பவருக்கும் 1 முதல் 5 பிரதிவாதிகளின் சகோதரருமான அம்பேத் என்பவரின் மக்களும் என்றும், தாவா சொத்துக்கள் 1ம் வாதியின் மாமனாரும், 2, 3 வாதியின் தந்தை வழி பாட்டனாரும், 1 முதல் 5 பிரதிவாதிகளின் தகப்பனாரும் மற்றும் 6ம் பிரதிவாதியின் மாமனாரும் 7, 8 பிரதிவாதிகளின் தந்தைவழி பாட்டனாருமான

பெருமாள் என்பவருக்கு உரித்தான சொத்து என்றும், அதாவது மேற்படி பெருமாள் என்பவர் 23.12.1985 தேதியில் லட்சுமியம்மாள் என்பவரிடமிருந்து பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் எண்.1707/1985 ன் முன்னிலைக்கு கிரையம் பெற்று ஆண்டு அனுபவித்து வந்ததாகவும், மேற்படி தாவா சொத்திற்கு உரிமையாளரான பெருமாள் என்பவர் கடந்த 13.12.2002 ம் தேதி தாவா சொத்துக்கள் குறித்து எந்த விதமான ஆவணமும் ஏற்படுத்தாமல் இறந்துவிட்டதாகவும், மேற்படி இறந்துவிட்ட பெருமாளின் சட்டப்பூர்வமான வாரிசுகளான அவரது மனைவி, அவரது மக்கள்களான 1ம் வாதியின் கணவரும், 2, 3ம் வாதிகளின் தகப்பனாருமான காலஞ்சென்ற உதயசங்கர் என்பவரும், 1 முதல் 5 பிரதிவாதிகளும் 6, 7 , 8 பிரதிவாதிகளின் தகப்பனாருமான அம்பேத் என்பவரும் ஆக மொத்தம் 8 நபர்கள் ஒன்றாக ஆண்டு அனுபவித்து வந்ததாகவும், குறிப்பிட்டுள்ளார்.

2.2) தாவா சொத்துக்கள் குறித்து வாதிகளுக்கும், 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் தெரியாமல் 6ம் பிரதிவாதியின் கணவரும் 7, 8 பிரதிவாதிகளின் தந்தையுமான அம்பேத் என்பவர் கோதைநாயகியின் கல்வி அறியாமையை பயன்படுத்தி ஏமாற்றி தாவா சொத்து குறித்து 23.02.2010 ம் தேதி கிரைய ஆவண எண்.475/2010 பதிவு செய்துள்ளதாகவும், இவ்விவரம் அனைத்தும் அப்போது வாதிகளுக்கு தெரியாது என்றும், 13.01.2020 ம் தேதியன்று தாவா சொத்து குறித்து வில்லங்க நகலை பார்த்த போது தான் கோதைநாயகி அம்பேத் என்பவருக்கு 23.02.2012 தேதியன்று கிரைய ஆவணம் எழுதி கொடுத்தது தெரியவந்ததாகவும்,

தாவா சொத்து வாதிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் உரிமையுள்ள நிலையில் கோதைநாயகி அவர்களுக்கு முழுமையாக உரிமையில்லாத சொத்தினை அம்பேத் கிரையம் ஏற்படுத்தியது சட்டப்படி தவறு என்றும், குறிப்பிட்டுள்ளார்.

2.3) மேலும் கோதைநாயகி என்பவர் கடந்த 11.05.2021 ம் தேதியில் இறந்துவிட்டபடியால் வழக்கில் சேர்க்க முடியாத சூழ்நிலை வாதிகளால் இந்நீதிமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது என்றும், இந்நிலையில் வாதிகளும் இவ்வழக்கின் 1 முதல் 5 பிரதிவாதிகளும் பலமுறை 6 ம் பிரதிவாதியின் கணவரும் 7, 8 பிரதிவாதிகளின் தந்தையுமான அம்பேத் என்பவரை நேரில் அணுகி தாவா சொத்துக்களில் தனக்கு சேர வேண்டிய பாகத்தை பிரித்தளிக்குமாறு ஊர் பெரியோர்கள் உதவியுடன் கேட்டதற்கு வீண் கால விரயம் செய்து வந்ததாகவும், ஆதலால் வாதிகளும், இவ்வழக்கின் 1 முதல் 5 பிரதிவாதிகளும் 6 ம் பிரதிவாதியின் கணவரும் 7, 8 பிரதிவாதிகளின் தந்தையுமான அம்பேத் என்பவருக்கு எதிராக தாவா சொத்தில் பாகம் கோரி வந்தவாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.73/2022 வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே தாவாவை தொடர்ந்து தாவா சொத்துக்களில் வாதியின் 1/7 பாகத்தை பிரித்தளிக்க கோரி ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், பிரதிவாதிகள் தவறும்பட்சத்தில் நீதிமன்ற ஆணையரை நியமித்து வாதியின் 1/7 பாகத்தை தங்களுக்கு அளிக்க இறுதிநிலை தீர்ப்பானை பிறப்பிக்க கோரியும் தாவா சொத்தில் பகுதி உரிமையுள்ள கோதைநாயகி என்பவர் தாவா சொத்தினை கடந்த 23.02.2010 அன்று ஆவண எண்.475/2010 ன் படி அம்பேத் என்பவருக்கு எழுதிவைக்கப்பட்ட கிரைய ஆவணம்

செல்லாது என விளம்புகை செய்யக்கோரியும், பிரதிவாதிகள் கூட்டாக சேர்ந்து தங்களின் அதே சொத்தை மதிப்பிழப்பு மற்றும் பண மதிப்பிழப்பு ஏற்படும் வகையில் யாருக்கு எந்த பாகம் என்பதை தீர்மானிக்கும் முன்பு கடந்த 22.12.2022 தேதியில் ஏற்படுத்திய ஆவண எண்.4333/2022 செல்லாது என விளம்புகை செய்யகோரியும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. 1, 2, 4, 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/ 1, 2, 4, 6 முதல் 8 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:-</u>**

(3.1) இப்பிரதிவாதி இந்த எதிர் வழக்குரையை தனக்காகவும், இதர 1, 2, 4, 6 முதல் 8 பிரதிவாதிகளுக்காகவும், சேர்த்து தாக்கல் செய்துள்ளதாகவும், 1ம் வாதியின் கணவரும் 2, 3 வாதிகளின் தகப்பனாருமான காலம் சென்ற உதயசங்கர் என்பவரும் 1 முதல் 5 பிரதிவாதிகளும் உடன் பிறந்த சகோதர, சகோதரி என்றும், 6, 7, 8 பிரதிவாதிகள் 1ம் வாதியின் கணவரும் 2, 3 வாதிகளின் தகப்பனாருமான காலம் சென்ற உதயசங்கர் என்பவருக்கு 1 முதல் 5 பிரதிவாதிகளின் சகோதரருமான அம்பேத் என்பவரின் மக்களும் ஆவர் என்றும், தாவா சொத்து 1ம் வாதியின் மாமனாரும் 2, 3 வாதிகளின் தந்தை வழிப் பாட்டனாரும் 1 முதல் 5 பிரதிவாதிகளின் தகப்பனாரும் 6ம் பிரதிவாதியின் மாமனாரும் 7, 8 பிரதிவாதிகளின் தந்தை வழிப்பாட்டனாருமான பெருமாள் என்பவருக்கு உரிமையான சொத்து என்றும், மேற்படி பெருமாள் என்பவர் 23.12.1985 ம் தேதி லட்சுமி அம்மாள் என்பவரிடமிருந்து பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவண எண்.1707/1985 முன்னிலைக்கு கிரையம் பெற்று ஆண்டு அனுபவித்து வந்ததாகவும், குறிப்பிட்டுள்ளார்.

3.2) தாவாச் சொத்துக்கு உரிமையாளரான பெருமாள் என்பவர் கடந்த 13.12.2002 ம் தேதி தாவா சொத்துக்கள் குறித்து எந்தவிதமான ஆவணமும் ஏற்படுத்தாமல் இறந்துவிட்டதாகவும், மேற்படி பெருமாள் என்பவரின் இறப்பிற்கு பிறகு தாவாச் சொத்து விவரத்தில் கண்ட சொத்தினை இறந்துவிட்ட பெருமாளின் சட்டப்பூர்வமான வாரிசுகளான அவரது மனைவி கோதைநாயகி என்பவரும் அவரது மக்களான 1ம் வாதியின் கணவரும், 2. 3 வாதிகளின் தகப்பனாருமான உதயசங்கர் என்பவரும் 1 முதல் 5 பிரதிவாதிகளும், 6ம் பிரதிவாதி கணவரும் 7, 8 பிரதிவாதிகளின் தகப்பனாருமான அம்பேத் என்பவரும் ஆக மொத்தம் 8 நபர்களும் ஒன்றாக ஆண்டு அனுபவித்து வந்ததாகவும், அதன் அடிப்படையில் தாவாச் சொத்தின் பட்டாவானது மேற்படி பெருமாள் மனைவி அவரது மகனான 1ம் வாதியின் கணவரும் 2, 3 வாதிகளின் தந்தையுமான காலம் சென்ற உதயசங்கர் 1 முதல் 5 பிரதிவாதிகள் மற்றும் 6 ம் பிரதிவாதியின் கணவரும் 7, 8 பிரதிவாதிகளின் தந்தையுமான அம்பேத் ஆகியோர் பெயரில் கூட்டு பட்டாவாக பட்டா எண்.183 பதிவாகி உள்ளது என்றும், குறிப்பிட்டுள்ளார்.

3.3) உண்மையாதெனில் கோதைநாயகி அறியாமையை பயன்படுத்தி அம்பேத் என்பவர் 23.02.2010 அன்று ஏற்படுத்திய கிரைய ஆவணம் வாதிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் கடந்த 2020ம் ஆண்டு தான் தெரிய வந்தது என்று சொல்லியுள்ளது சரியே என்றும், ஆனால் அம்பேத்தின் வாரிசுகள் அந்த சொத்து

அவர்களுக்கு மட்டும் தான் உரிமையானது என எவ்வித பிரச்சனையும் ஏற்படுத்தவில்லை என்றும், 6ம் பிரதிவாதி மேற்படி கிரைய ஆவணத்தை இதர வாரிசுகளிடம் அளித்த மேற்படி தாவாச் சொத்தை வாரிசுகள் அனைவரும் பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொள்ள அறிவுறுத்தியதாகவும், தனிப்பட்ட முறையில் எவ்வித உரிமையும் கோரவில்லை என்றும், குறிப்பிட்டுள்ளார்.

3.4) கோதைநாயகி என்பவர் கடந்த 11.05.2021ம் தேதியில் இறந்துவிட்டபடியால் வழக்கில் சேர்க்க முடியாத சூழ்நிலை வாதிகளால் இந்த நீதிமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது என்றும், இந்நிலையில் வாதிகளும் இவ்வழக்கில் 1 முதல் 5 பிரதிவாதிகளும் பலமுறை 6 ம் பிரதிவாதியின் கணவரும 7, 8 பிரதிவாதிகளின் தந்தையுமான அம்பேத் என்பவரை நேரில் அணுகி தாவாச் சொத்துக்களில் தனக்கு சேர வேண்டிய பாகத்தை பிரித்து அளிக்குமாறு ஊர் பெரியவர்களின் உதவியுடன் கேட்டதற்கு வீண் கால விரயம் செய்துவந்துள்ளார் என்றும், அதனால் வாதிகளும் 1 முதல் 5 பிரதிவாதிகளும் ம 6ம் பிரதிவாதியின் கணவரும் 7, 8 பிரதிவாதிகளின் தந்தையுமான அம்பேத் என்பவருக்கு எதிராக தாவாச் சொத்தில் பாகம் கோரி வந்தவாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.73/2022 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி வழக்கு நிலுவையில் இருந்தபோது 6ம் பிரதிவாதியின் கணவரும் 7, 8 பிரதிவாதிகளின் தந்தையுமான அம்பேத் என்பவர் இறந்துவிட்டார் என்றும், மேற்படி அசல் வழக்கு 73/2022ல் வாதிகள் தவிர்த்த மற்ற வாதிகளும் பிரதிவாதி இறந்துவிட்டபடியால்

அவரது வாரிகள் அனைவரும் கடந்த 23.12.2022 அன்று தாவாச் சொத்துக்களை ஆவண எண்.4333/2022 ன் படி பாகப்பிரிவினை செய்துகொண்ட விரவம் வாதிகளுக்கு தற்போது தான் தெரியவந்ததது என்றும், மேற்படி கிரைய ஆவணத்தில் வாதிகள் பார்ட்டிகள் இல்லாததால் அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும், மேற்படி ஆவணத்தை ரத்து செய்ய கோரி தனி பரிகாரம் எதையும் கோர வேண்டிய அவசியமில்லை என்றும், விளம்புகை செய்யக் கோரி பரிகாரம் கோரப்படுகிறது என்றும், சொல்லியுள்ள சங்கதிகள் சரியல்ல என்றும், குறிப்பிட்டுள்ளார்.

3.5) இப்பிரதிவாதியும், இதர பிரதிவாதிகள் மற்றும் வாதிகளுடன் சேர்ந்து 23.12.2022 ம் தேதி பாகப்பிரிவினை ஆவணத்தை ஏற்படுத்தும்போது பெருமாளின் ஆண் வாரிசுகளுக்கு தாவாச் சொத்தில் 0.10 சென்ட்டும், ஒரே பெண் வாரிசான 2 ம் பிரதிவாதி அஞ்சலிதேவிக்கு 0.06 சென்ட்டும் என ஒதுக்கீடு செய்து ஆவணம் எழுதப்பட்டு பதிவுக்கு செல்லும் சமயத்தில் வாதிகளும், 3 ம் பிரதிவாதியும் வீணாக பிரச்சனைகள் செய்து பத்திர எழுத்தரையும், சார்பதிவாளரையும் அவதூறாக பேசி சண்டையிட்டும் ஆவணத்தில் கையெழுத்திட மறுத்தும் சென்றுவிட்டதாகவும், மேற்படி சங்கதிகள் அனைத்தும வாதிகளுக்கும், 3 ம் பிரதிவாதிக்கும் அப்பொழுதே தெரிந்திருந்த நிலையில் வீணாக தாவாவில் தற்போது தான் ஆவணம் எழுதிய விவரம் தெரியும் என தவறான சங்கதிகளை தெரிவித்துள்ளதாகவும், மேலும் 3 ம் பிரதிவாதி மற்றும் 1ம் வாதிக்கும் மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தில் பாகம் ஒதுக்கி ஆவணம் எழுதிய நிலையில் வாதிகளும், 3 ம் பிரதிவாதியும் கையெழுத்திட

மறுத்தால் அவர்களின் பெயர்களை நீக்கி சார் பதிவாளர் அறிவுறுத்தலின் பேரிலேயே மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றும், இருப்பினும் வருவாய் துறை ஆவணங்களில் வாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதிக்கு சேர்த்து 0.20 சென்ட் என ஒதுக்கீடு செய்துவிட்டதால் 1ம் வாதியின் கணவரும் 2, 3 வாதிகளின் தந்தையுமான உதயசங்கர் மற்றும் 3ம் பிரதிவாதியின் பெயரில் கூட்டாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், அதன் பட்டா எண்.1695 என்றும், மேற்படி சூழ்நிலையில் வாதிகளுக்கு தாவாச் சொத்தில் பாகம் வழங்காமல் ஏமாற்றுவது போன்ற ஒரு மாயை உருவாக்கி இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளதாகவும், வாதிகள் இந்த தாவாவில் பெருமாளுக்கு பாத்தியப்பட்ட இதர சொத்துக்களை விடுத்து இந்த தாவாச் சொத்தை மட்டும் காண்பித்து தாவா தாக்கல் செய்துள்ளது பகுதி பாகப்பிரிவினை தோஷத்தால் பாதிக்கப்படுகிறது என்றும், எனவே இந்த தாவாவும் இம்மனுவும் தள்ளுபடி செய்யதக்கது.

**4. <u>இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கவேண்டுமா? இல்லை? என்பதே ஆகும்.</u>**

4.1) இம்மனு கட்டளை XXXIX, விதி. 1 மற்றும் 2 உ.வி.மு.ச.வின் கீழ் மனு சொத்துக்களில் உள்ள பாகம் குறித்து தீர்மானிக்கும் வரை மனு சொத்துக்கள் குறித்து எவ்வித ஆவணங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும், மனு சொத்துக்கள் எந்த நிலையில் உள்ளதோ அதே நிலையில் நீடிக்க வேண்டும் என்று இடைக்கால தடையுத்தரவு கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தங்களுடைய மனுவில் தாங்கள் எதிர்மனுதாரருக்கு எதிராக பாகப்பிரிவினை கோரி

வழக்கு தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். 1ம் மனுதாரரின் கணவரும், 2, 3 மனுதாரர்களின் தகப்பனாருமான காலம்சென்ற உதயசங்கர் என்பவர் 1 முதல் 5 எதிர்மனுதாரர்களின் உடன் பிறந்த சகோரர் மற்றும் 6, 7, 8 எதிர்மனுதாரர்கள் மேற்படி 2ம் சகோதரரான அம்பேத் என்பவரின் வாரிசுகள் என்றும் குறிப்பிட்டுள்ளனர். மனு சொத்துக்கள் 1 ம் மனுதாரரின் மாமனாரும், 2, 3 மனுதாரர்களின் தந்தை வழி பாட்டானருமான பெருமாள் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், மேற்படி சொத்துக்களை பெருமாள் கடந்த 23.12.1985 தேதியன்று லட்சுமி அம்மாள் என்பவரிடமிருந்து கிரையமாக பெற்றதாகவும் குறிப்பிட்டுள்ளனர். மேற்படி பெருமாள் கடந்த 13.12.2002 அன்று காலமாகிவிட்டதாகவும் அதன் பின்னிட்டு 1ம் மனுதாரரின் கணவரும் 2, 3 மனுதாரரின் தகப்பனாருமான உதயசங்கரும் 1 முதல் 5 எதிர்மனுதாரர்களும் 6ம் எதிர்மனுதாரரின் கணவரும் 7, 8 எதிர்மனுதார்களின் தகப்பனாருமான அம்பேத் என்பவரும் மனு சொத்துக்களை ஒன்றாக அனுபவித்து வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளனர். மேற்படி அம்பேத் என்பவர் கடந்த 23.02.2010 ம் தேதியன்று அவருடைய தாயாரான கோதைநாயகி என்பவரின் கல்வி அறியாமையை பயன்படுத்தி அவரை ஏமாற்றி 23.02.2010 அன்று மனுதாரருக்கு தெரியாமல் ஒரு கிரைய ஆவணம் எழுதி வாங்கியதாகவும் குறிப்பிட்டுள்ளனர். மேற்படி கோதைநாயகி என்பவர் கடந்த 11.05.2021 தேதியன்று காலமாவிட்டதாக குறிப்பிட்டுள்ளனர். அதன் பின்னிட்டு மனுதாரர்களும் 1 முதல் 5 எதிர்மனுதாரர்களும் சேர்ந்து மேற்படி அம்பேத் என்பவருக்கு எதிராக வந்தவாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பாகம் கோரி அ.வ.எண்.73/2022 என்ற வழக்கை தாக்கல்

செய்திருந்ததாக குறிப்பிட்டுள்ளனர். அதன் பின்னிட்டு கடந்த 22.12.2022 அன்று மனு சொத்துக்களை குறித்து மனுதாரர்களை தவிர எதிர்மனுதாரர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு பாகப்பரிவினை ஆவணத்தை ஏற்படுத்தி கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளனர். அதன் பின்னிட்டு கடந்த 04.12.2023 ம் தேதியன்று எதிர்மனுதாரர்கள் மேற்படி பாகப்பிரிவினை அடிப்படையில் மனுச் சொத்துக்களை விற்பனை செய்ய முயன்றதகாவும் குறிப்பிட்டுள்ளனர். எனவே மனுதாரர்கள் பாகப்பிரிவினை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்து மேற்படி 23.02.2010 தேதியிட்ட கிரையம் ஆவணமும் 22.12.2022 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணமும் செல்லாது என்று விளம்புகை பரிகாரங்களும் கோரியுள்ளதாகவும், தற்போது மனு சொத்துக்கள் குறித்து எந்தவித ஆவணங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும், மனு சொத்துக்கள் எந்த நிலையில் உள்ளதோ அதே நிலையில் நீடிக்க வேண்டும் என்று கோரி இம்மனுவினை இடைக்கால தடையுத்தரவு கோரி தாக்கல் செய்துள்ளனர்.

4.2) இம்மனுவிற்கு 3ம் எதிர்மனுதாரர் எந்தவித எதிருரையும் தாக்கல் செய்யவில்லை.

4.3) 1, 2, 4 முதல் 8 வரையான எதிர்மனுதாரர்கள் வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையையே தங்களுடைய எதிருரையாக ஏற்றுக்கொண்டுள்ளனர். மேற்படி எதிர்மனுதாரர்கள் மனுதாரர் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை மறுத்துள்ளனர். மேலும் மனுதாரர்களும், இம்மனுவின் எதிர்மனுதாரர்கள் அனைவரும் சேர்ந்து கடந்த 23.12.2022 தேதியன்று

பாகப்பிரிவினை ஆவணத்தை ஏற்படுத்த தொடங்கிய போது பெருமாளின் ஆண் வாரிசுகளுக்கு தாவா சொத்தில் 10 சென்டும், ஒரே பெண் வாரிசான 2ம் பிரதிவாதியான அஞ்சலிதேவிக்கு 6 சென்ட் என ஒதுக்கீடு செய்து ஆவணம் எழுதப்பட்டு பதிவுக்கு செல்லும் சமயத்தில் மனுதாரர்களும் 3ம் எதிர்மனுதாரரும் வீணாக பிரச்சனை செய்து பத்திர எழுத்தரையும், சார்பதிவாளரையும் அவதூறாக பேசி சண்டையிட்டு ஆவணத்தில் கையெழுத்திட மறுத்து சென்றுவிட்டதாக குறிப்பிட்டுள்ளனர். எனினும், மனுதாரர்கள் மற்றும் 3ம் எதிர்மனுதாரருக்கு சேர்த்து 20 சென்ட் என ஒதுக்கீடு செய்துவிட்டு மேற்படி பாகப்பிரிவினை ஆவணம் எழுதப்பட்டதாக குறிப்பிட்டுள்ளனர். மேலும் மேற்படி பாகப்பிரிவினை ஆவணப்படி மனுதாரர்களுக்கும், 3ம் எதிர்மனுதாரருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட 20 சென்ட் குறித்து அவர் அவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளனர். எனவே இவ்வழக்கிற்கு வியாஜிய மூலம் இல்லை என்றும், இவ்வழக்கும் இந்த இடைநிலை மனுவும் தள்ளுபடி செய்யதக்கது என்று எதிர்மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்,.

4.4) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பாகப்பிரிவினை கோரி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். இம்மனுவில் மனுச் சொத்துக்கள் குறித்து எந்தவித ஆவணங்களும் ஏற்படுத்தக்கூடாது என்று எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இடைக்கால தடையுத்தரவு பரிகாரம் கோரியுள்ளனர். மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ள மனு சொத்துக்கள் குறித்த

சங்கதிகள் குறித்தும் மேலும் மனுதாரர்களுக்கு மனு சொத்துக்களில் பாகம் உள்ளதா, இல்லையா, என்பது குறித்த சங்கதிகளை குறித்தும் இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க இயலாது. மனுதாரர்களின் பாக உரிமை குறித்து வழக்கின் முழு விசாரணைக்கு பின்பு மட்டுமே முடிவு செய்ய இயலும். இம்மனுவினை பொறுத்தமட்டில் மனு சொத்துக்கள் குறித்து எதிர்மனுதாரர்கள் வழக்கு முடியும் வரை எந்தவித ஆவணங்களும் ஏற்படுத்தக்கூடாது என்று மனுதாரர்கள் கோரியுள்ளனர். ஆனால் அவ்வாறு ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டாலும், அது இந்த வழக்கின் தீர்ப்புக்கு கட்டுப்பட்டது என்பதே பிரிவு 52 சொத்துரிமை மாற்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள Lis Pendens கோட்பாடாகும். எனவே மேற்படி சட்டப்பிரிவின் கீழ் மனுதாரர்களுக்கு பாதுகாப்பு உள்ள சூழ்நிலையில் இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதார்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்று கருத முடியாது. மேலும் எதிர்மனுதாரர்கள் மனுச் சொத்துக்களில் பங்குடைய பங்குதாரர்கள் என்று மனுதாரர்களே குறிப்பிட்டுள்ள சூழ்நிலையில் மனுச்சொத்துக்கள் தற்போது உள்ள நிலையிலேயே நீடிக்க வேண்டும் என்று மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரத்தையும், சகபங்குதாரர்களான எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழங்க இயலாது. மேற்சொன்ன சூழ்நிலையில் மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கதக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**<u>முடிவாக:-</u>**

**இறுதியாக** இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகின்றது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பரப்பட்டது.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.12.11 18:02:39 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.12.11 18:02:44 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி.